
# காவியம்

ஆசிரியர்: சுரதா.

(கவிதை வார இதழ்)

சுவடி 1: ஏடு 5 | சென்னை: திருவள்ளுவராண்டு, 1987, ஐப்பசி 4 21—10—55 | விலை அணா 1


## கொங்கு நாட்டின் கொள்கை வீரன்





வெட்டொன்று துண்டொன்று என்று பேசும்
வெடிக்குரலோன் அழகிரிபோல்; முடிவு தன்னைத்
திட்டவட்ட மாய்க்கூறும் துணிவு பெற்ற
சிங்கார மணிப்பிள்ளை ! பழைய கோட்டை
பட்டயகா ரர்திலகம் ! அழியாக் கீர்த்திப்
பரம்பரையி லேவந்த கொள்கை வீரன்.
வெட்டுகின்ற வாள்தன்னை எடுத்து ஏந்தும்
வேந்தர்களின் மலைநாடு தந்த மைந்தன்.

கண்ணுக்கு இமைபோன்று இருந்தோன். கட்சிக்
கருத்துக்குக் குறள்போன்று இருந்தோன். நீல
விண்ணுக்கு மழைபோன்று இருந்தோன். ஆனால்
விழலுக்கு நீர்போல இருந்த தில்லை !
எண்ணத்தி லேதெளிவை, சீர்தி ருத்த
இயக்கத்தி லேகருத்தைப் பதிய வைத்த,
கண்ணழகன், அர்ச்சுனனை எண்ணும் போதுக்,
கருங்கடலைத் தான்விழியில் காணுகின்றோம் !

பெருமீசை வைத்திருந்த பன்னீர்ச் செல்வப்
பெருந்தகையார் தனையிழந்து ஏங்கும் போது,
அரும்பைப்போல் சிறுமீசை வைத்த இன்னோன்
அரியதுணை யாயிருப்பான் என்று எண்ணிப்,
பெருங்கனவு நாம்கண்டு வந்தோம். கண்ட
பெருங்கனவை நிறைவேற்றும் செம்மல் தன்னை;
மரணமெனும் உயிர்பிரிக்கும் சக்தி வீழ்த்த;
மாணிக்கம் போன்றவனை இழந்து விட்டோம் !

மலரிருந்தால் மணம்வீசும்; மதுவை நல்கும்.
மறுபடியும் காயாகும்; கனியும்; இந்த
நிலையாவும் நிகழ்தற்குக் கொடியில், அப்பூ
நிச்சயமாய் நிலைத்திருத்தல் வேண்டும். ஆனால்
கலைஅழகன் தான்இருபத் திரண்டி லேயே
கண்மூடி விட்டானே என்ன செய்வோம் !
குலைத்தெங்கு வீழ்ந்ததென வீழ்ந்தி டாமல்,
கொள்கைதனை இவன்போன்று செழிக்கச் செய்வோம்!

### சாவா மருந்து



வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

—ஆசாரக்கோவை

★ அக்டோபர்-12; அர்ச்சுனன் நினைவு நாள் ★

# இதயம்

சென்னை 21—10—55 வெள்ளி

## மக்களுக்கு வேண்டுவது பக்தியா? பகுத்தறிவா?

### விஞ்ஞானம் வளரும் வெளிநாட்டிலே !

தேயுமோர் நிலவி டத்தில்
சென்றிட முயலும் நாட்டில்
ஆயுத பூசை யில்லை !
அறியாமை இல்லை ! இங்கே,
ஆயிரம் பூசை செய்து
அனுதினம் கும்பிட் டாலும்,
தாயத்து மந்தி ரிக்கும்
தற்குறித் தனந்தான் மிச்சம்.

### ஆட்டுமந்தை ஆகாதீர் !

நாட்டிலே உள்ளோர், கல்வி
நலம்பெற வேண்டு மென்றால்,
ஏட்டினைத் தொழுவ தாலே,
ஏற்பட்டு விடுமா ? வீணே,
ஆட்டுக்குப் பின்னே செல்லும்
ஆடுபோல், சிந்திக் காமல்
காட்டிடும் பக்தி யாலே
கல்வியா நாக்கில் ஏறும் ?

### உண்டா இதில் உண்மை ?

கலைத்திரு நாளென் றிட்டால்,
கருத்துக்கள் அதிலி ருக்கும்.
உலகெலாம் உணர்ந்து ஓதற்
கரியவன் மனையாம், சக்தி
பலத்தினை எடுத்துக் கூறும்
பக்தர்கள் நடத்து கின்ற,
கொலுத்திரு நாள்ச டங்கில்
கொஞ்சமும் உண்மை உண்டா ?

★

## வண்டு இலையில் மொய்க்குமா?

நாத்திகரின் பேச்சுதனை நம்பி, வீணே
நலங்கெட்டுப் போகாதீர், கோயில் சென்று,
சாத்துபடிச் செய்யுங்கள் என்று கத்தும்
தருமபுரக் குரலோரே ; நீங்கள் கூறும்
சாத்திரமெல் லாம்இலைகள், எங்கள் கூட்டம்
தந்துவரும் எண்ணமெலாம் மலர்க ளாகும்.
பூத்தமலர் மீதில்தான் வண்டி னங்கள்
போய் மொய்க்கும் என்பதனை மறந்திடாதீர்?

சொல் விளக்கம் :

## முளரி



பூச்செண்டு என்பவளும், அண்டை வீட்டுப்
பொன்னரசி என்பவளும் தமிழைப் பற்றி
மூச்சுவிடா மல்பேசிக் கொண்டே, வெய்யில்
முதிராத காலையிலே தடாகம் சென்றார்.
பூச்சியம்மா என்பவளும் குடத்தை ஏந்திப்
புனல்மொண்டு போவதற்கு அங்கே வந்தாள்.
காய்ச்சியபால், கற்கண்டு, கரும்பு ; மூன்றும்
கலந்ததுபோல் பலகதைகள் பேச லானார்.


நீராடும் நிகழ்ச்சியிலே ஈடு பட்டாள்,
நீலவிழிப் பொன்னரசி. குளத்தில் வாழும்,
ஓராயிரம் கமலப் பூக்க ளோடு
உறவாடும் இராணிமலர் ஆனாள்; பின்னர்.
வேரோடு ஓர்மலரைப் பறித்து நீல
விழியோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள்.
நாரோடு சேராத மலரே ! இல்லம்
நாம்போக வேண்டாமா? என்றாள் செண்டு

அப்போது கிளியேந்தி அங்கே வந்தாள்,
அன்னத்தைப் போல்நடந்து. சேலை தன்னைத்
தப்பிக்கொண் டேயிருந்த மங்கை, கட்டித்
தங்கத்துச் சிலையாளை நிமிர்ந்து நோக்கி,
இப்போது தான்உன்னைக் கொண்டைக் கோழி
எழுப்பிற்றோ எனக்கேட்டாள். சிரித்துக் கொண்டே
இப்போது தான்வேலை முடிந்த தென்று,
இயற்கையழ குடையஅவள் பதிலு ரைத்தாள்.

கிண்ணத்தைப் போலிருக்கும் மலர்க்கூட் டத்தைக்
கிளியேந்தி கண்குளிரப் பார்த்தாள், பார்த்துப்
புண்டரிகம், பங்கயப்பூ, என்ற, இந்தப்
பூப்பெயரின் காரணத்தை அறிவேன். ஆனால்!
வண்டுதொடும் தாமரையை முளரி என்னும்
வார்த்தையினால் குறிப்பதுஏன்? இதனைப் பற்றிக்
கண்ணழகி நீஉரைப்பாய் என்று கூறிக்
கைமலரை பூச்செண்டின் தோளில் வைத்தாள் !

முளரிஎனும் சொல்லுக்கு; இடுப்பின்மீது
முள்ளுடைய மலரென்று அர்த்தம் என்றாள்.
விளக்கமிது போதாது, இதனைச் சற்று
விரிவாகக் கூறுஎன கன்னி கேட்டாள்.
இளநீரைப் போன்றவளே ! அரிஎன் னும்சொல்
இடுப்பென்னும் பொருள்கொடுக்கும்; முள்ளைப் பற்றி
விளக்கங்களா வேண்டும்? என்று கேட்க
விளங்கிற்றென் றாள்கேள்வி கேட்ட வஞ்சி !

—சுப்பு ரத்தின தாசன்.



# காதலியோடு ★ ★ காளமேகம்

> தமிழறி வுடைய தாசி மோகனா,
> அழகின் தலைவி! அத்தொடு கவிஞன்
> காளமே கத்தின் காதற் பதுமை!
>
> ஃ ஃ ஃ
>
> ஐந்து நூறு ஆண்டு கட்குமுன்
> திருவா னைக்கா திருநகர் தன்னில்,
> ஆதவன் நழுவும் அந்தி வேளையில்,
> அதிமது ரக்கவி ஆணவந் தன்னை
> அடக்கிட எண்ணி ஆசு கவிஞன்.
> எழுந்தான் திருமலை இராயன் பட்டினம்.
> புறப்படும் அந்தப் பிரிவு வேளையில்;
> கோவை இதழ்தனைக் கொடுக்கும் வஞ்சியுமே
> நாவில் வல்ல நல்ல புலவனும்
> வழங்கிக் கொண்ட வார்த்தைத் தொடர்களை
> எடுத்து இங்கே தொடுத்துளோம் இசையிலே!

['தேள்ளுதமி ழுக்குதவு சீலன்' என்னும் அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து சந்தம்]

**மோகனாங்கி :**

மன்னன்மலை ராயன்சபை சென்று—கவி
மன்னனிதோ வந்துவிட்டே னென்று—கல்வி
  மான்களொடு வாதமிட்டு
  தேன்மதுரைக் கீரனைப்போல்,
    வருவீர் புகழ் தருவீர்!

**காளமேகம் :**

நீலக்கடல் நாகைவழி செல்வேன்—அங்கு
நிச்சயமாய்ப் போட்டிதனில் வெல்வேன்—கதிர்
  நெல்லுதவும் நல்லவயல்
  நீரில்முகம் பார்க்கும், துண்டு
    நிலவே புது இலவே!

**மோகனாங்கி**

சென்றுவிரைந் துவந்தென்னைத் தொடுவீர்—வெற்றிச்
சேதியை முதலில்வர விடுவீர்—தொட்டுச்
  செக்கச்சிவந் திட்டகனி
  இக்கரையி லேதனியே,
    தேங்கும்! இரவி லேங்கும்!

**காளமேகம் :**

திக்குளட்டுக் கும்புகழைத் தருவேன்—திரும்பித்
தேனுறுஞ்சும் வண்டுஎன வருவேன்—வந்து
  சித்திரமே உன் கரத்தில்
  ரத்தினப் பொருளைத் தந்து
    சிரிப்பேன்! கதை உரைப்பேன்!

**மோகனாங்கி :**

அந்தரங்க இன்பசுகந் தேடும்—எந்தன்
அங்கமுங்கள் பிரிவினால் வாடும்—இனி
  அந்திநில வும்அனலாய்
  அன்னங் கூட வெண்மணலாய்
    ஆகும் நெஞ்சு வேகும்!

**காளமேகம் :**

செந்தமிழி னிமைதருந் தேனே!—விழி
தேர்ந்தெடுத்த காவிரியின் மீனே!—பிறைச்
  சித்திரமே! இன்னுமொரு
  பத்துதினத் தில்வருவேன்
    சென்று, இதழ் தின்று!

சுரதா

# அந்த நாள் என்று வருமோ?

பழமை அழிந்தது! புதுமை மலர்ந்தது!—இங்கு
  பகுத்தறி வாளர் பெருகிய தாலே!
இழிவு தரும்செயல் யாவும் மறைந்தன—நாட்டில்
  இருப்பவர் அனைவரும் கற்றவர் ஆயினர்.
உழவும் தொழிலும் இளமைபோல் வளர்ந்தன உலகில்
  உயர்ந்த திருக்குறள் வார்த்தைகள் பரவின.
அழுகையில் லாதஓர் ஆனந்த உலகம்—அமைந்த
  அந்நாள் தமிழர்க்கு என்று வருமோ?

ஆயிரம் தெய்வம் இனிஇலை இங்கே—நூறு
  ஆயிரம் அறிஞர் தோன்றினர் நாட்டிலே
தாயினும் சிறந்த தமிழ்மொழி தனிலே—சங்கம்
  தந்தது போல்கவி தருபவர் பிறந்தார்;
காயமிது பொய்யெனும் கருத்து உடையோர்—இன்பக்
  காதல் செய்தார்! வாழ்வில் உய்தார்!
கோயில்,—பள்ளிக் கூடமாய் ஆனது—என்னும்
  குரல்தனைக் கேட்பது எந்த நாளோ?

உத்தம சீலரும்! உயர்ந்த சித்தரும்—என்றும்
  உண்மைக்கு உயிர்விடும் தேசத் தொண்டரும்.
புத்தரைப் போல்பல அன்பு மனிதரும்—நீதிப்
  புத்தகம் எழுதிடும் நல்எழுத் தாளரும்
சித்திரக் கலைதனை வளர்த்திடும் கலைஞரும்—ஆண்ட
  சேரனைப் போல்பல வீரரும்; தீரரும்;
நித்திரை புரிந்திடா நல்லதோர் ஆட்சியும்—தமிழ்மொழி
  நிலைத்தது போலிங்கு நிலைப்பதெந் நாளோ?

★ ★ ★

<u>இசைப்பாடல்–5</u>

## மழை இருந்தால் பனி இல்லை!

எடுப்பு

மழை இருந்தால் பனி இல்லை—கனி
மரத்திலிருந்தால் மலர் இல்லை—பெய்யும் (மழை)

(மேல் எடுப்பு)

பிழை இருந்தால் எதுவும் உயர்வு இல்லை—சாதி
பேதமுள்ள நாட்டில் அமைதி இல்லை (மழை)

(அமைதி)

நம்பிக்கை இன்றி பாரில் நட்பு இல்லை—முழுதும்
நனைந்து போனவர்க்கு ஈரம் இல்லை—எதற்கும்
கும்பிடும் மனப்பான்மை சிறப்பு இல்லை—கைக்
குழந்தையைப் போல் சிறந்த ஞானி இல்லை (மழை)

சேரனைப் போல் உலகில் வீரன் இல்லை—நம்
செந்தமிழ் போல் எதுவும் இனிப்பதில்லை—நக்
கீரனைப்போல் சங்கத் தலைவன் இல்லை—வாழ்வில்
கீர்த்தி பெறாதவர்க்குத் திசைகள் இல்லை (மழை)

## அரங்கேற்றம்!

### மான் பட விளக்கம் :

காவியப் பொழில்கள் தோறும்
களிப்புட னணுகி ஆய்ந்த
மாவுயர் புலவ ரெல்லாம்
மருவறு குறளைக் காட்டி,
யாவிலும் உயர்ந்த திஃதே
அருந்துக, என்றார்; இந்த
ஓவிய மானும், சேய்க்கே
உண்ணுநீர் காட்டக் கண்டேன்!

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

தான்பயர் திட்ட சேய்க்குத்
தலைக்கொம்பு உடைய பெண்மான்
தேன்மலர்த் தோட்டங் காட்டித்
திசைதனைச் சுட்டிக் காட்டி
வான்தொடும் மலையைக் காட்டி
வரும்வழி தன்னில்; குட்டி
மான்மகள் ஓடை நீரை
மகிழ்வொடு குடித்தல் பாரீர்.

—க. மீ. சுந்தரம்,
வடகுடி, தஞ்சைமாவட்டம்.

★

வலியவர் தமக்கே யஞ்சி
வாழ்ந்திடு மக்கள் போல
புலியொடு சீயம், பொல்லா
விலங்கினுக் கஞ்சக், குட்டி
நலிவுறா திருக்கப் பார்க்கும்
நவ்வியும்; நமக்கு நன்கு
பொலிவுடன் தாய்மை அன்பு
புகட்டிடும் பான்மை அன்றோ?


—க. க. இளவன், மதுரை.

★

மேலே நீல மெருகு வானமும்
கீழே, பலவிதக் கிளைமரச் சோலையும்,
பரவிப் பாய்ந்திடும் பனிநீர் அருவியும்,
அருவியின் அருகில், அழகிய தாய்மான்
காவல் புரிந்திட, கன்னிச் சிறுமான்
இயங்கும் நீரினை இழுத்துக் குடித்திடும்
போதிலே தனது, பொன்னுடல் அழகைக்
கண்ணாடி நீரில் காண்பது இனிமையே.

—சக்திதாசன்,
பருத்தித்துறை, இலங்கை.

—எப்போதும் இருப்பவர்—5.—



கடவுளைக் கண்ட துண்டா?
காட்டுவீர் எனக்கு என்று;
தடபுட லாகக் கேட்ட
சரித்திரக் கேள்விக் காரன்?
படித்தவன்! பட்டா தாரி!
பார் புகழ் துறவி; சாதிக்
கொடுமையை வேர றுக்கும்
கொள்கையோன்; பிரமச் சாரி!

### விவேகானந்தர்

★

### வாத்தியார் விருத்தம்.

மாணவர் என்பவர் இன்று
மதிப்புடன் ஆசான் சொல்லை;
வேணவாக் கொண்டு நாளும்
விருப்புடன் கற்பார் இல்லை.
வாணவே டிக்கைக் காண
வந்திடும் கூட்டம் போலக்
காணவே வருவார், கல்விக்
கருத்துடன் கற்பார் இல்லை!

புலவர் சீ. உண்மை ஒளியான்,
முத்துப்பேட்டை, (தஞ்சை)

## இவர்கள் யார்?

| கணவன் : | மனைவி : |
|---|---|
| கூன் பாண்டியன் ++ | ++ மங்கையர்க்கரசி |
| மணலைத் தடவும் வைகை பிறந்த மதுரையை ஆண்ட மகுட மன்னன். | கரும்புச் சுவையொடு கவிதை இயற்றும் ஆற்றல் உடைய அழகுத் தமிழ்மயில்! |
| பிந்துசாரன் ++ | ++ சுபத்ராங்கி |
| மௌரிய வம்சத்து மன்னர் மனிதன்; அன்பு வளர்த்த அசோகன் தந்தை. | முதலில் காதல் முத்தம் சுவைத்து, அதற்குப் பிறகு அரசி ஆனவள். |
| தாயுமானவர் ++ | ++ மாட்டுவார்க்குழலி |
| சத்தமி டும்புவி மித்தை என்றெண்ணும் தத்துவ முடிவைத் தந்த கவிஞர். | இல்லற ஒழுங்கு இம்மியும் கெடாது நல்லறம் வளர்த்த நற்றமிழ் நங்கை. |
| இராமலிங்க அடிகள் ++ | ++ தனக்கோட்டியம்மாள் |
| சுயமரியாதைத் துறவி; சமரச! சுத்தசன் மார்க்க போதனை புரிந்தவர். | திருமண மாகியும் இரவுச் சுவைபெறாது அழுதேவாழ்வின் பொழுதைக் கழித்தவள் |
| தொழுவூர் வேலாயுத முதலியார் ++ | ++ சீரங்கம்மாள் |
| இனிக்கும் அருட்பா இராம லிங்க அடிக ளாரின் அருமைச் சீடர். | ஆய்ந்த அறிவு அறிந்த மக்களைப் பெற்று மகிழ்ந்த பெண்டிர் திலகம்! |

## நமது மேடை

### துவக்க விழா.

அக்டோ பர்பதி னைந்து காலை,
அண்ணா மலைநகர் அறிவா லயத்தில்,
திராவிட மொழிக்குச் சிறப்புத் தேடிடும்
ஆய்வுத் துறையை அமைச்சர் சுப்பிர
மணியம் துவக்கி வைத்துப் பேசிட,
செட்டிநாட் டரசரும், சேதுப் பிள்ளையும்
செந்தமிழ் மொழிக்குச் செய்திட இருக்கும்
பல்கலைக் கழகப் பணிகளைப் பற்றி
விரிவுரை தந்து விளக்கினர் ஆங்கே!

★

### செட்டி நாட்டரசரின் கேள்வி ?

சேலம், அக் 12-

பணத்தை அனுப்பும் பத்தி ரத்திலும்,
அஞ்சல் அனுப்பும் அட்டையின் மீதிலும்,
இந்தி எதற்கு இருத்தல் வேண்டும்?
சிந்தனை வளர்க்கும் செந்தமிழ் நாட்டில்,
தமிழில் இருத்தல் தவறா? என்று,
அதட்டி கேட்டார் ஆள்பவர் தம்மை
செட்டிநாட் டரசர் சேலம் நகரிலே!

★

கொல்லிமலைச் சாரலிலே, சேரமானைக் கண்டதினால், நல்ல தென்றலையும் மறந்தார், என்று பாடிய பாரதி தாசன் பரம்பரையிலே வந்த தங்களது ‘காவியம்’ கவிதை உலகைக் கட்டிக் காக்கும் ஆற்றலோடு இருப்பதைக் கண்டு பூரிக்கிறேன். பாராட்டுகிறேன்.

—மூ. செல்லப்பன்
போடிநாயக்கன்பட்டி (நாமக்கல்)

★

தம்மிற் பகைவிளைக்குந்தன்மையாம்இந்தியினை
செம்மையா யொழிக்க வந்த நறகாவியமே!
நன்றுநீ தென்றுணரா எந் தமிழ் நாட்டார்க்கு
பொன்னுரை வழங்கி நீ வாழி

—எம். லீலா

★

மூவாத் தமிழ் பயந்த மூன்னூற் றமிழகத்தில்
பயின்றா ருளமகிழப் பாண்மொழியர்த் தோன்றி
இறவாப்புகழ் படைத்த இன்சொற் காவியமே!
திசைச்சென்றுசெயமடைந்த தமிழ்க்குலத்தை
மிசையனைத்தும் காட்டி நீ வாழி!

—மூருகு பாக்கியம், சேலம்

★

### துன்பம் நேர்கையில்!

வான்புகழ்பாரதிவாழ்க்கைத்துணைவியார்,
புதுவை அளித்த புரட்சிக் கவிஞரின்,
துன்பம்நேர்கையில்யாழெடுத்தென்னும்,
அமைதிக் கருத்து அடங்கிய பாடலைப்
பாடச் சொல்லிப் பலதரங் கேட்டுச்
சாந்திபெற் றாராம் சாவும் பொழுதிலே!

### அறிவிப்பு

“காவியம்” முதலில் அறிவித்திருந்தபடி வெள்ளிக்கிழமையிலேயே வெளிவரவேண்டுமென்று பல அன்பர்கள் வற்புறுத்துவதனாலும், துவக்க முதலே ‘காவியம்’ அச்சேறுவதில் தாமதமேற்பட்டு வருவதாலும், இவ்வாரம் வாசகர்களின் குறையைப் போக்கும் எண்ணத்துடன் ஒரு ஏற்பாடு செய்துள்ளோம். அதாவது இவ்வார இதழ் வெள்ளிக்கிழமை (21-10-55)ல் வெளிவருகிறது. தொடர்ந்து வெளியூரிலும் வெள்ளிக்கிழமையே கிடைக்கும்படியான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இனி தாமதமேற்பட வழியேயில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பொறுப்பாளர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுராதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி பிரஸ்.
19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-7
[ஆண்டு சந்தா ரூ. 4. ஆறு மாதம் ரூ. 2.]